# தேவகோட்டை நகராட்சி

தேவகோட்டை நகராட்சி வளாகத்தில் சாதாரணக்கூட்டம் தனிஅலுவலரால் 30.06.2021ம் தேதி திங்கள்கிழமை காலை 11.00 மணிக்கு கூட்டம் நடைபெறவுள்ளது. அவ்வமயம் கீழ்கண்ட பொருட்கள் விவாதத்திற்கு எடுத்துக்கொள்ளப்படும்.

**பொருள்:– 50**

தேவகோட்டை நகராட்சியில் மத்திய அரசின் 15–வது நிதிக்குழு மானிய நிதி 2020–2021–ன் கீழ் ரூ.144/– இலட்சம் மதிப்பீட்டில் பொது பணிகள் மேற்கொள்ள நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் செயல்முறை ஆணை ந.க.எண்:20452/2020/LA3 நாள்:10.11.2020–ல் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டது. நிர்வாக அனுமதி பெறப்பட்ட கீழ்கண்ட பணிகளுக்கு 18.06.2021 அன்று ஒப்புதல் புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் மீது மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும வைக்கப்படுகிறது.

| வ. எண் | வேலையின் பெயர் | மதிப்பீடு ரூ (லட்சத்தில்) | ஓப்பந்ததாரர் பெயர் | விலைவிகிதம் மதிப்பீட்டை விட |
|---|---|---|---|---|
| 1 | இந்நகராட்சி திடக்கழிவு மேலாண்மை பணிக்கு புதிதாக மின்கலன் இயங்கு வாகனங்கள் மற்றும் தள்ளுவண்டிகள் விநியோகம் செய்தல் பணி | 9.50 | 1) Eswari Enterprises-Devakottai | 0.30% குறைவு |
| | | | 2) Agro Engg and Service - Chellampatty | 3.60% அதிகம் |
| 2 | நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.1 முதல் 9 வரை உள்ள பகுதிகளில் விடுபட்ட தெருக்களுக்கு குடிநீர் பகிர்மான குழாய் பதித்தல் பணி | 9.70 | 1)திரு.A.ஆரோக்கியசாமி | 4.72% குறைவு |
| | | | 2) திரு. R.தர்மராஜன் | 9.31% அதிகம் |
| 3 | நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.10 முதல் 18 வரை உள்ள பகுதிகளில் விடுபட்ட தெருக்களுக்கு குடிநீர் பகிர்மான குழாய் பதித்தல் பணி | 9.80 | 1)திரு.A.ஆரோக்கியசாமி | 4.85% குறைவு |
| | | | 2) திரு. R.தர்மராஜன் | 8.06% அதிகம் |
| 4 | நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.19 முதல் 27 வரை உள்ள பகுதிகளில் விடுபட்ட தெருக்களுக்கு குடிநீர் பகிர்மான குழாய் பதித்தல் பணி | 9.60 | 1)திரு.A.ஆரோக்கியசாமி | 4.69% குறைவு |
| | | | 2) திரு. R.தர்மராஜன் | 9.32% அதிகம் |
| 5 | நகராட்சி குடிநீர் பணிக்காக நீர்மூழ்கி மின்மோட்டார்கள் | | 1) MUTHU ELECTRICALS & PIPES | 4.83% குறைவு |

| | | | | |
|---|---|---|---|---|
| | விநியோகம் செய்தல் பணி | 9.50 | - Devakottai | |
| | | | 2) Eswari Enterprises- Devakottai | 7.58% அதிகம் |
| 6 | நகராட்சி குடிநீர் பணிக்காக நீர்மூழ்கி மின் மோட்டார்களுக்கு பேனல் போர்டு மற்றும் உதிரி பாகங்கள் விநியோகம் செய்தல் பணி | 9.00 | 1) MUTHU ELECTRICALS & PIPES - Devakottai | 4.74% குறைவு |
| | | | 2) Eswari Enterprises- Devakottai | 7.62% அதிகம் |
| 7 | நகராட்சி குடிநீர் பணிக்காக பல்வேறு அளவுகளில் வால்வுகள் (SLUICE VALVE) மற்றும் உதிரிபாகங்கள் விநியோகம் செய்தல் பணி | 4.00 | 1) MUTHU ELECTRICALS & PIPES - Devakottai | 4.90% குறைவு |
| | | | 2) Eswari Enterprises- Devakottai | 6.99% அதிகம் |
| 8 | வார்டு எண்.4, யோகிராம்சுரத்குமார் பகுதியில் புதிய ஆழ்துளைக்குழாய் கிணறு அமைத்து தண்ணீர் வசதி செய்தல் பணி | 6.80 | 1)திரு.A.ஆரோக்கியசாமி | 4.73% குறைவு |
| | | | 2) திரு. R.தர்மராஜன் | 8.98% அதிகம் |
| 9 | வார்டு எண்.19, தொண்டியார் வீதி பகுதியில் புதிய ஆழ்துளைக்குழாய் கிணறு அமைத்து தண்ணீர் வசதி செய்தல் பணி | 6.80 | 1)திரு.A.ஆரோக்கியசாமி | 4.71% குறைவு |
| | | | 2) திரு. R.தர்மராஜன் | 8.77% அதிகம் |
| 10 | வார்டு எண்.27, தாளாம்பாள் நகர் பகுதியில் புதிய ஆழ்துளைக்குழாய் கிணறு அமைத்து தண்ணீர் வசதி செய்தல் பணி | 6.80 | 1)திரு.A.ஆரோக்கியசாமி | 4.66% குறைவு |
| | | | 2) திரு. R.தர்மராஜன் | 8.88% அதிகம் |

குடிநீர் பணி மற்றும் திடக்கழிவு மேலாண்மை பணியின் முக்கியத்துவம் மற்றும் அவசரத்தைக் கருதி நகர்மன்றத்திற்கு உள்ள அதிகாரத்தை பயன்படுத்தி முதல் அழைப்பிலேயே மதிப்பீட்டை 5 சதவிகிதம் கூடுதல் வரை உள்ள ஒப்பந்தப்புள்ளிகளை மன்றம் ஏற்கலாம் என நகராட்சி பொறியியல் கையேட்டில் விதி எண் 2.7.2–ல் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்நிலையில் மதிப்பீட்டு விலை விகிதத்தினைவிட கூடுதல் விகிதத்தில் ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள ஒப்பந்ததாரர்களின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்பது குறித்து மன்றத்தில் பார்வைக்கும் முடிவுக்கும் வைக்கப்படுகிறது.

<u>அலுவலகக்குறிப்பு–</u>

அ) வரிசை எண் 1–ல் உள்ள பணிக்கு வரப்பெற்ற குறைந்த ஒப்பந்தபுள்ளியை மன்றம் ஏற்கலாம்.

ஆ) வரிசை எண் 2 முதல் 10 வரை உள்ள பணிகள் குடிநீர் பணிகள் என்பதால் பணியின் முக்கியத்துவம் மற்றும் அவசியத்தை கருதி கூடுதல் விலை விகிதம்

கொடுத்துள்ள ஒப்பந்ததாரர்களின் ஒப்பந்தப்புள்ளிகளை மன்றம் ஏற்கலாம்

இ) மேற்காணும் பணிகளுக்கு மதிப்பீட்டைவிட கூடுதல் செலவீனத்தை நகராட்சி குடிநீர் நிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண்: 50**

அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

**பொருள்: 51**

தேவகோட்டை நகராட்சியில் குடிநீர் மற்றும் வடிகால் நிதி 2020–2021 – ன் கீழ் மன்றத்தால் நிர்வாக அனுமதி பெறப்பட்ட கீழ்கண்ட பணிக்கு 18.06.2021 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டத்தில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் தனி அலுவலரின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | வேலையின் பெயர் | மதிப்பீடு ரூ (லட்சத்தில்) | ஒப்பந்ததாரர் பெயர் | விலைவிகிதம் மதிப்பீட்டை விட |
|---|---|---|---|---|
| 1 | தேவகோட்டை நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.14. சிலம்பனி சன்னதி தெருவில் மழைநீர் வடிகால் அமைத்தல் பணி. | 1.80 | 1) திரு V.கணபதி | 0.13% குறைவு |
| | | | 2) திரு T.பாண்டி | 2.61% அதிகம் |
| 2 | தேவகோட்டை நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.01, இராம்நகர் சிவகங்கை ராஜா ரோடு பகுதி, வார்டு எண்.2, அண்ணாசாலை மீனாட்சி அம்மன் நகர் பகுதி, வார்டு எண்.07, கண்டதேவி நீர்தேக்க தொட்டி ஆகிய இடங்களில் சுற்றுசுவர், காவலர் அறை கட்டுதல் பணி. | 9.50 | 1) திரு V.கணபதி | 0.14% குறைவு |
| | | | 2) திரு T.பாண்டி | 1.95% அதிகம் |

அலுவலகக்குறிப்பு–

பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளியில் மேற்கண்ட விபரப்படி மதிப்பீட்டை விட குறைவாக கொடுத்த ஒப்பந்ததாரர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்கலாம்.

**தீர்மான எண்: 51**

அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

**பொருள்:– 52**

தேவகோட்டை நகராட்சியில் கல்விநிதி 2020–21ன் கீழ் மன்றத்தால் நிர்வாக அனுமதி பெறப்பட்ட கீழ்கண்ட பணிகளுக்கு 29.06.2021 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் தனி அலுவலரின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | வேலையின் பெயர் | மதிப்பீடு ரூ (லட்சத்தில்) | ஒப்பந்ததாரர் பெயர் | விலைவிகிதம் மதிப்பீட்டை விட |
|---|---|---|---|---|
| 1 | தேவகோட்டை நகராட்சிக்கு சொந்தமான 6வது தொகுதி நகராட்சி தொடக்கப்பள்ளி மராமத்து பணி செய்தல் | 3.50 | 1) திரு R.பாலாஜி | (-) 0.16% குறைவு |
| | | | 2) திரு R.தர்மராஜன் | 3.61 % அதிகம் |
| 2 | தேவகோட்டை நகராட்சிக்கு சொந்தமான 9வது தொகுதி நகராட்சி தொடக்கப்பள்ளி சத்துணவுகூடம் பணி செய்தல் | 6.70 | 1) திரு R.பாலாஜி | (-) 0.18% குறைவு |
| | | | 2) திரு R.தர்மராஜன் | 4.07% அதிகம் |
| 3 | தேவகோட்டை நகராட்சிக்கு சொந்தமான 9வது தொகுதி நகராட்சி தொடக்கப்பள்ளியில் சுற்றுச்சுவர் கட்டுதல் பணி செய்தல் | 7.70 | 1) திரு R.பாலாஜி | (-) 0.12% குறைவு |
| | | | 2) திரு R.தர்மராஜன் | 3.32 % அதிகம் |

<u>அலுவலகக்குறிப்பு–</u>

பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளியில் மேற்கண்ட விபரப்படி மதிப்பீட்டை விட குறைவாக கொடுத்த ஒப்பந்ததாரர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்கலாம்.

**<u>தீர்மான எண்: 52</u>**

அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

**<u>பொருள்:– 53</u>**

தேவகோட்டை நகராட்சி பொதுசுகாதாரப் பிரிவின் கீழ் இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் துப்புரவு பணி மேற்கொள்ள ஆணையாளர் அவர்களின் இதே எண்ணிட்ட செயல்முறை உத்தரவு ந.க.எண்: 1009/2019/எச்1 நாள்: 19.12.2015ன் படி 115 தூய்மை பணியாளர்களுக்கு பணி மேற்கொள்ள உத்தரவு வழங்கப்பட்டு உள்ளது. ஒப்பந்தகாலம் முடிவடைந்த காலம் முதல் பணி நீடிப்பு முறையில் செயல்பட்டு வருகிறது. மேலும் ஒப்பந்தப்புள்ளி கோருவதற்கு அனுமதி வேண்டி நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களுக்கு நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் அலுவலகத்திலிருந்து பரிந்துரை செய்து கடிதம் அனுப்பட்டுள்ளது. இருப்பினும் நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களிடமிருந்து அனுமதி பெறப்படும் நிலையில் காலதாமதம் ஏற்படுவதாலும் தற்போது வழங்கப்பட்ட மூன்று மாத பணி நீடிப்பு 30.06.2021–வுடன் முடிவடையும் நிலையில் உள்ளது. மேலும் தமிழகத்தில் கொரோனா வைரஸ் இரண்டாம் அலை பரவி உள்ளதால் கொரோனா வைரஸ் காய்ச்சல் தடுப்பு பணி மற்றும் பொது சுகாதாரப்பணி இந்நகராட்சி பகுதிகளில் தொய்வின்றி மேற்கொள்ளவும்

பணியின் அவசர அவசியம் கருதியும் பொதுமக்களின் பொது சுகாதார நலனை கருத்தில் கொண்டும் நிர்வாக அனுமதிபெற்று ஒப்பந்தப்புள்ளி கோரப்படும் வரை தற்போது 115 தூய்மை பணியாளர்களை கொண்டு பொது சுகாதாரப்பணி மேற்கொள்ளும் மதுரை மீனாட்சி திடக்கழிவு மேலாண்மை காரைக்குடி என்பவருக்கு பழைய ஒப்பந்த விதிகளின்படி மேலும் மூன்று மாதங்களுக்கு 01.07.2021 முதல் 30.09.2021 வரை பணி நீடிப்பு செய்து வேலை உத்தரவு வழங்கவும் பணி மேற்கொள்ளஆகும் உத்தேச செலவீனம் ரூ.45,00,000–க்கு (நாற்பத்து ஐந்து இலட்சம்) செலவு மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு:–

அ) பொதுசுகாதார பணி என்பதால் மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ) மேற்காணும் பணிக்கு பொதுநிதியின் கீழ் செலவு மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண்: 53**

அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

**பொருள்:– 54**

தேவகோட்டை நகராட்சி பொதுசுகாதாரப்பிரிவின் கீழ் கொரோனா வைரஸ் காய்ச்சல் தடுப்பு பணிக்கு இந்நகர் பகுதிகளில் கிருமி நாசினிகள் தெளிக்க கடந்த மார்ச் 2020 முதல் புதியதாக மூன்று வாகனத் தெளிப்பான்கள் (Vertical Mounted Sprayer) வாங்கப்பட்டு தற்போதுவரை பயன்படுத்தப்பட்டு வந்தது. இந்நிலையில் தற்போது மூன்று வாகனத் தெளிப்பான்களில் பாகங்கள் பழுதடைந்து பயன்படுத்த இயலாத நிலையில் உள்ளது. மேலும் இந்நாகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் கொரோனா வைரஸ் காய்ச்சல் அதிகளவில் பரவி வருவதால் இந்நகர் பகுதிகளில் கொரோனா வைரஸ் காய்ச்சல் தடுப்பு நடவடிக்கை மேற்கொள்ள மூன்று வாகனத் தெளிப்பான்களில் பழுதடைந்த பகுதிகளை மாற்றி பழுதுகைள சரசெய்து பணி மேற்கொள்ளவும் பொதுமக்களின் பொதுசுகாதார நலனை கருத்தில் கொண்டும், பணியின் அவசர அவசியம் கருதி விலைப்புள்ளி பெற்று பணி மேற்கொள்ள ஆகும உத்தேச செலவீனம் ரூ.2,10,000/–த்திற்கு செலவு மேறகொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது/

அலுவலக குறிப்பு: அ) மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ) குறைவான விலைப்புள்ளி வழங்கும் நிறுவனத்திற்கு வேலை உத்தரவு வழங்கி மேல் நடவடிக்கை மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

இ) மேற்படி செலவீனத்தை நகராட்சி பொது நிதியின் கீழ் செலவு மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண்: 54**

அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

**பொருள்:– 55**

தேவகோட்டை நகராட்சியின் அலுவலக பயன்பாட்டில் உள்ள கணிணி உபகரணங்கள் பழுது நீக்கம் செய்ய 21.06.2021 அன்று விலைப்புள்ளி அறிவிக்கப்பட்டது. அவ்வறிவிப்பின்படி

கீழ்காணும் விபரப்படி மூன்று விலைப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது. அதன் விபரம் பின்வருமாறு:–

| வ.எண் | நிறுவனத்தின் பெயர் | தொகை |
|---|---|---|
| 1 | அருள்கம்ப்யூட்டர்ஸ் | 49,900/– |
| 2 | சிவம் காப்பியர் | 52,950/– |
| 3 | காரை கம்ப்யூட்டர்ஸ் | 52,300/– |

அலுவலக குறிப்பு:–

அ) பெறப்பட்ட மூன்று விலைப்புள்ளிகளில் அருள் கம்ப்யூட்டர்ஸ் நிறவனத்தின் விலைப்புள்ளி குறைவாக உள்ளதை மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ) மேற்காணும் செலவீனத்தை பொதுநிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண்: 55**

அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

**பொருள்:– 56**

தேவகோட்டை நகராட்சிக்குட்பட்ட வார்டு எண் 22–ல் ஜீவா நகர் பகுதி உள்ளது. இப்பகுதியில் ஏழை எளிய மக்கள் நிறைய வசித்து வருகின்றனர். இப்பகுதியில் நகராட்சிக்கு சொந்தமான சமுதாய கூடம் ஒன்று உள்ளது. இக்கூடத்தில் திருமணங்கள் போன்ற பல்வேறு நிகழ்ச்சிகள் நடைபெற வசதிகள் உள்ளது. மேலும் சமையல் கூடம் மற்றும் அமர்ந்து உணவு உண்ணும் இடம் போதிய இடவசதி இல்லை. அதனால் ஊர் பொதுமக்கள் சமையல் கூடம் அமைத்து தர விண்ணப்பம் செய்துள்ளார்கள். அதன் அடிப்படையில் ஒரு சமையல் கூடம் கட்டிடம் அமைக்க தயார் செய்த மதிப்பீட்டு தொகை ரூ.9.20 இலட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு:–

அ) மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ) மேற்காணும் பணிக்கான செலவீனத்தை போதுநிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கவும்.

**தீர்மான எண்: 56**

அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

**பொருள்:– 57**

தேவகோட்டை நகராட்சிக்குட்பட்ட திண்ணஞ்செட்டி ஊரணி பகுதியில் உள்ள காந்தி பூங்காவில் உள்ள காந்தி சிலைக்கு கம்பிவேலி அமைக்கும் பணிக்கு 21.06.2021 அன்று விலைப்புள்ளி கோரப்பட்டது. அவ்விலைப்புள்ளி அறிவிப்பின்படி வரப்பெற்றுள்ளது. அதன் விபரம் பின்வருமாறு:–

| வ.எண் | நிறுவனத்தின் பெயர் மற்றும் ஒப்பந்ததாரர் பெயர் |
|---|---|
| 1 | v.கணபதி, ஒப்பந்ததாரர் |
| 2 | R.தர்மராஜன், ஒப்பந்ததாரர் |
| 3 | மார்க் ப்ளை ஆஸ் ப்ரிக்ஸ், தேவகோட்டை |

அலுவலக குறிப்பு:–

அ) பெறப்பட்ட மூன்று விலைப்புள்கிளில் v.கணபதி ஒப்பந்ததாரின் விலைப்புள்ளி குறைவாக உள்ளதை மன்றம் ஏற்கவும்.

ஆ) மேற்காணும் பணிக்கான செலவீனத்தை போதுநிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கவும்.

**தீர்மான எண்: 57**

அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

**பொருள்:– 58**

தேவகோட்டை நகராட்சியில் பொறியியல் பிரிவில் நடைபெறும் ஒப்பந்தப்புள்ளிகளை ஆன்லைனில் பதிவு செய்வதற்கு அலுவலக பணிக்காக E-Tender பெற E – Token வாங்கப்பட்டுள்ளதால் அதற்கான செலவீன தோகை ரூ.4500/– இவ்வலுவலகத்தின் மூலமாக Digital Identify நிறுவனத்தார்க்கு வழங்கிட மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு:–

அ) மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ) மேற்காணும் செலவீனத்தை பொதுநிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண்: 58**

அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

**பொருள்:– 59**

தேவகோட்டை நகராட்சிக்குச் சொந்தமான இராமநகர் ஆணையாளர் குடியிருப்பில் தோராயமாக சுமார் 600 கிலோ மற்றும் அதே பகுதியில் உள்ள MCC மையத்தில் தோராயமாக சுமார் 100 கிலோ என மொத்தம் 700 கிலோ பயன்படுத்த முடியாத பழைய இரும்பு பொருட்கள் கடந்த 40 ஆண்டுகளாக குப்பைபோல் தேங்கி கிடக்கிறது. மேலும் பழை பொருட்கள் கிடப்பதால் சுகாதார கேடு உருவாகிறது. மேற்படி பழைய இரும்பு பொருட்களை பொது ஏலத்தில் விட்டு அப்புறப்படுத்த மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு:–

அ) மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ) பணியின் அவசியம் அவசரம் கருதி மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண்: 59**

அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

***(ஒப்பம்)கே .மதுசூதனன்***
***தனி அலுவலர் மற்றும் ஆணையாளர்(பொ)***